**EASTERN UNIVERSITY, SRI LANKA**
**FACULTY OF ARTS AND CULTURE**

**Second Year Second Semester Examination in Bachelor Arts and Culture 2015/16**
**Specialization in Economics (August 2018)**

**ECS 2233 Managerial Economics**

பகுதி I இல் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் மூன்று வினாக்ளுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக கணித்தற்பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது

நேரம்: 3 மணித்தியாலம்

---

## பகுதி I

1. i. முகாமைப் பொருளியல் என்றால் என்ன? அது ஒரு நிறுவன முகாமையாளனுக்கு எவ்வகையில் உதவுகின்றது என்பதனை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. இலாப நோக்குடைய நிறுவனம் ஒன்றின் பிரதான இலக்குகளை விளக்குக

(04 புள்ளிகள்)

iii. பொருளியல் கோட்பாடுகள் இலாப நோக்க நிறுவனமொன்றின் தீர்மானங்களை மேற்கொள்வதில் எவ்வாறு பங்களிப்புச் செய்யும் என விளக்குக.

(04 புள்ளிகள்)

iv $Q_1, Q_2$ என்ற இரு வேறுபட்ட பொருட்களுக்கான நுகர்வோர் பயன் சார்பினைக் கருதுக.

$$U = Q_1 . Q_2$$

அப் பொருட்களுக்கான விலைகள் $P_1, P_2$ முறையே ரூபா 5/-, 10/- எனவும் வருமானம் M 1000 ரூபா எனவும் கொள்க

$Q_1, Q_2$ பொருட்களுக்கான கேள்விக் கோடுகளை லக்ரான்சியன் முறையில் பெறுக.

(08 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

2. i. நிறுவனம் ஒன்றின் உற்பத்திப் பொருளுக்கான விலை சார் கேள்வி நெகிழ்ச்சி என்பதனால் நீர் விளங்கிக் கொளவது யாது? அது எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. ஒரு உற்பத்திப் பொருளுக்கான விலைசார் கேள்வி நெகிழ்ச்சி -2 எனக் கொள்க. அப் பொருளின் விலை 5% குறைவடைகின்றது எனின் அப் பொருளின் கேள்வித் தெகையில் எத்தகைய மாற்றம் ஏற்படும்?

(05 புள்ளிகள்)

iii. X வகை கோப்பிக்கான கேள்விச் சார்பு பின்வருமாறுள்ளது எனக் கருதுக

$$Q_x = 1.5 - 3.0\,P_x + 0.8\,I + 2.0\,P_y - 0.6\,P_s + 1.2\,A$$

7. பின்வருவனவற்றை விளக்குக

i. நீண்டகால செலவுக் கோடு
ii. இலாப நட்டமற்ற புள்ளி
iii. திருப்பிச் செலுத்தும் கால முறை
iv. தேறிய நிகழ்காலப் பெறுமதி முறை
v. உள்ளாந்த செலவுகள்

(மொத்தம் 20 புள்

Qx - X வகை கோப்பிக்கான கேள்வி
Px – X வகை கோப்பின் விலை
I – செலவிடத்தக்க வருமானம்
Py – Y வகை கோப்பின் விலை
Ps – சீனியின் விலை
A – விளம்பரச் செலவு

தற்போது

Px=$2, I=$2.5, Py=$1.80, Ps=$0.50 A= $1 ஆக உள்ளது

a. ஒவ்வொரு மாறிகள் தொடர்பாகவும் நெகிழ்ச்சிக் குணகங்களை மதிப்பிட்டு விளக்குக

b. அடுத்த வருடம் நிறுவனமானது Px - 5%, A - 12%, I - 4%, Py -7% ஆகிய வீதங்களினால் அதிகரிக்கவும் Ps - 8%. ஆல் குறைக்கவும் எதிர்பாக்கின்றது எனின் அடுத்த வருடத்துக்கான X வகை கோப்பிக்கான கேள்வித் தொகை யாது?

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** i. பொருளியலில் கேள்வி எதிர்வு கூறல் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

(02 புள்ளிகள்)

ii. முகாமையியல் தீர்மானங்களுக்கு கேள்வி எதிர்வு கூறல் எவ்வாறு உதவுகின்றது? உதாரணங்களுடன் விளக்குக.

(03 புள்ளிகள்)

iii. கேள்வி எதிர்வு கூறலின் வேறுபட்ட நுட்பங்களை சுருக்கமாக வகைப்படுத்துக

(07 புள்ளிகள்)

iv. பொருளாதார ஆய்வு மையம் ஒன்று நாடொன்றின் வருமானச் சுட்டெண்ணுக்கும் தொலைக்காட்சி பெட்டிகளின் கேள்விக்குமான பின்வரும் தரவுகளைத் தருகின்றது.

| வருடம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| வருமானச் சுட்டெண் | 100 | 110 | 140 | 150 | 200 |
| தொலைக்காட்சி பெட்டிக்கான கேள்வி (000) | 110 | 130 | 150 | 160 | 180 |